சென்னை சாணாகதி மந்திரிகள்.

இன்னும் எத்தனை நாள்?

இன்றைக்கு

238-வது நாள்.

விடுதலை.

ஈரோடு 1938-ஹ மார்ச்சு மீ 8உ செவ்வாய்க்கிழமை.

சென்னை பட்ஜட் முன்னைவிட மோசம்

இப்போது கடப்பது மாகாண சுயாட்சி. இதிலே நமது மாகாணத்து செல்வ நிலையை அதிகரிக்கச் செய்யவும், ஏழ்மையைப் போக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், வரிப்பளுவைக் குறைக்கவும், நீதியான முறையைவரி வசூல் விஷயத்தில் புகுத்தவும், நீர்ப்பாசனம் முதலிய வற்றிற்காக புதுப்புது திட்டங்களை வகுக்கவும் கடமையை உணர்ந்து நடக்கக்கூடிய காரியவாதிகளான மந்திரிகள் யாராயிருந்தாலும் அவர்களால் செய்ய முடியும். ஏன் எனில் முன் போல இரட்டை யாட்சிச் சனியன் இன்று இல்லை. பொக்கிஷம் மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. மாகாண வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு மந்திரிகளுக்கே இருக்கிறது. அதிலும், இப்போது நமது மாகாண மந்திரிகளாக இருப்பவர்கள் "சாமான் யர் எல் லா", "ஏகமுக்கியஸ்தர்கள்! தேசநேஷமே அவர்கள் உயிர்!!" என்றல்லவா சொல்லுப்படுகிறது! முன்பு பூரண, அதிகாரமில்லாமல "உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி" என்ற பழமொழிப்படி ஒரு பக்கம் பொதுஜன சேவை என்னும் பேரும்பு, மறு பக்கம் வெள்ளைக்கார அதிகாரிகளுக்குத் தொல்லை என்ற இரு நெருக்கடியில் அகப்பட்டுமுன்ற ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளுக்கு இருந்த தொல்லை இவர்களுக்கு இல்லை காங்கரஸ் மந்திரிசபை பட்ஜெட்டைப் பற்றி ஆராயுமுன்பு பொதுமக்கள் இவ்விஷயத்தைக் கவனத்திலிருத்த வேண்டுகிறோம். பூர்ண அதிகாரம் படைத்த இவர்கள் தயாரித்துள்ள பட்ஜெட்'டின் உண்மைச் சொரூபம் அப்போதுதான் தெரியும்.

காங்கரஸ்காரர்கள் பதவிக்கு வருமுன்பு, ஜஸ்டிஸ் மந்திரிகள் 1ஐக்கு 20-அல்லது 25என்றளவிற்கு கிலவரிவஜா செய்து, "இதுதான் பிரமாதம். இவ்வளவுதானா வரி வரி. கிலவரி முறையையே மாற்றிய மைக்க வேண்டாமா? அப்போதுதானே ஏழைமக்களின் வாழ்க்கையில் சுகம் ஏற்படும்" என்று கேலி செய்வதுண்டு. 33சர்செண்ட்டு குறைக்க தீர்மானம் கொண்டு வருவதுமுண்டு. அக்காலத்தில் எக்த பொதுஜன சேவைக்கான காரியத்திற்காக, சக்திக்கேற்ற அளவு அந்த மந்திரிகள், பணத்தைச் செலவு செய்தாலும், "இது என்ன பிரமாதம்" என்று இக்கக் காங்கரஸ் கும்பல் கொக்கரித்து வந்தது.

இதோ இவர்கள் தயாரித்து சமர்ப்பித்த 'பட்ஜட்' வெளிவந்து விட்டது. இரு சனமகளிலும் விவாதிக்கப்பட்டு வந்துவிட்டது. பிரதம மந்திரியும் பொக்கிஷ மந்திரியாகவும் இருக்கும்னம். ராஜகோபாலாச்சாரியார், சமரசரியாகப் பேசியுள்ளார். அலக்காரச் சொற்பொழிவுகள்! அழகான உவமானங்கள்! காளை மாட்டுக் கதைகள் முதலிய சமர்க்குகளை, கனம் ஆச்சாரியார் சட்ட சபையிலே வீசி எறிந்தார். இது அபரத 'ஸ்பெஷல்' சமர்த்து! ஆனால் 'பட்ஜட்'டில் நாம் காணும் அற்புதம் ஏதேனும் உண்டா? அல்லது ஆச்சாரியார் கெஞ்சில் கைவைத்துக்கொண்டு, நிமிர்ந்து நின்று ஆண்மையுடன் 'இதோ மற்றவர்களால் செய்ய முடியாத அற்புதம் இது' என்று உறுமுகிறதா? அல்லது அவருடையவர்க்கத்தினரால் தான் முடியுமா என்றகேட்கிறோம்? மூன்று சாளை மடங்களும் ஒரு ஒங்கமும்" என்ற கதையைக் கூறிக் காலத்தள்ள முடிந்ததே ஒழிய, இன்னின்ன விதங்களிலே பொது ஜன நன்மைக்காகபடி மற்ற எவராலும் செய்ய முடியாத அளவு அற்புதம்நான் செய்து காட்டியிருக்கின்றேன் என புள்ளி விபரம் காட்ட முடிகிறதா எனக் கேட்கிறோம். இடைக்கால மந்திரிகள், வருஷா வருஷம், 75 இலக்ஷ ரூபாய் சாலவதமாக நில வரி வஜா செய்தனர். இத்தத் தொகை மிகக் குறைவு எனவும், இதை விட நிலவரி முறையையே மாற்றி அமைக்க வேண்டுமெனவும், இன்றைய பொக்கிஷ மந்திரியாரிடம் பொக்கிஷம் வராத முன்பு, அவர் பொழித்த தள்ளினார். இவருடைய "அற்புத" பட்ஜட்டிலே. இந்த 75 இலக்ஷத்தை அதிகரித்து இருக்கலாமே. 750 இலக்ஷம் வஜா செய்யலாமே! 100க்கு 50 விகிதம் குறைப்பதாகப் பறை சாற்றினவர்கள், என அவ்விதம குறைக்கக் கூடாது? யார் அவர்களை இன்று தடுக்கிறார்கள்? இடைக்கால மந்திரிகள் நிட்டப்படி 75 இலக்ஷமே குறைக்கக் காங்கரஸ் பட்ஜட்டில் இடங்கிடைத்ததினால் இதில் அற்புதமானதே, ஆனந்தம் ஏது, அல்லது ஆச்சாரியாருக்கு வாழ்த்துக் கூறத்தான் என்ன தேவை இருக்கிறது என்று கேட்கிறோம். எந்த அபசுதத்தை எடுத்துக் கொண்டு பட்ஜட்டைப் பரிசீலனை செய்தாலும், இதே முடிவிற்குத்தான், பொறுப்புணர்ச்சியுள்ளவர்கள் வரும்படி முடியும்.

"இது 'சர்ப்ரைஸ்' பட்ஜட். இதிலே 15 இலக்ஷம் கிராம ஜல சப்ளைக்கு ஒதுக்கி வைத்திருக்கிறோம். 50-இலக்ஷம், கிராமக்கடன் கிவாரணத்திற்கு ஒதுக்கி வைத்திருக்கிறோம்" என்று விளம்பரத்திற்காகச் சொல்லிக்கொள்வதைக் தவிர, நிரந்தரமான அற்புத மாறுதலெதுவையும் ஆச்சாரியார் பட்ஜெட்டிலே காட்ட முடியாதென்பதைத் திட்டமாகக் கூறலாம். இந்த பட்ஜட்டில் மிச்சமேற்படுவது, வரவு செலவைச் சரிக்கட்டிய சமத்தைப் பொறுத்ததல்ல. மீயேயர் தீர்ப்பினபடி வருமான வரியாக இங்கிய சர்க்கார் சென்னை மாகாணத்திற்கு 21-இலக்ஷ ரூபாய் வழங்கப் போகுறார்கள். இது ஒரு அதிர்ஷ்டச்சீட்டு; ஆச்சாரியாரின் அல்லலை சமயத்தில தீர்க்க உதவிற்று. ஆனால் இது சாசுவத மானதல்ல. இந்த 'டெபிஸ்' ரஸ்வெது வருமானத்தைப் பொறுத்து இருக்கிறது. ரயில்வே வருமானம் குறைந்தால், இந்த அதிர்ஷ்ட சீட்டு, ஆச்சாரியார் கைக்கு வராது. ஆகவே இதை எதிர்பார்த்தது 'பட்ஜட்' தயாரிக்க முயலுவதே வேஸ்டம். தயாரித்தால் அதமண குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதைபோல நிதான ஆகும். ஆனால் ஆச்சாரியாரா போக்கு அவ்வமாகத்தான் இருக்கிறது. சென்ற ஆண்டு 1½ கோடி, இந்த ஆண்டு 1½கோடி என ஆச்சாரியார் சலிக்காதது சளைக்காது கடன் வாங்கிய படி இருக்கிறார். இது ஆபதானான முறை எனபதைப் பல சட்டசபை அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டினார்கள். ஆச்சாரியார் அவர்களுடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. அவர் அதிகாரத்திற்குவந்த பிறகு யாருடைய வேண்டுகோளை மதித்தார், யாருடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தினார்? ஆச்சாரியார் தர்பாரிலே இவைகளுக்கு இடமில்லை என்பதை நாம் விளக்கத் தேவையில்லை என்று எண்ணுகிறோம். ஆனால் தென்னை மகாநாம் ஆச்சாரியார் ஆட்சியே 'ஆ கார' மாகாண மாகவே வருதத்தது என் பொது மக்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இத்தக் கடன்களைத் திருப்பித் தரும் வழிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆச்சாரியார் 'பட்ஜட்' மூறைப்படி ஐந்து ஆண்டும் கடைபெற்றால் சுமார் 100 லட்சம் இந்த மாகாணத்தின் மீது கடன் சுமை ஏறும். இந்த ஆபத்தைத் தரும் ஆச்சாரியார் பட்ஜட்டை வாழ்த்தி வரவேற்க யார் தான் துணிவார். மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தை இடுகட்டும் முறை இதன என ஆச்சாரியார் கூறவில்லை. கேலத் தைப்போன்ற ஜில்லாவிலே மதுவிலக்குசெய்தால் அதிக தண்டு விழுமே, என்ன செய்வதென்ற பயத்தி கொண்டே பெயர் அளவிற்கு இரண்டுஜில்லாவானாலும், தண்டு விழும் தொகை குறைவாக இருக்குப்படியாக ஸித்தூர், கடப்பையை பொறுக்கி எடுத்துக்கொண்டார் ஆச்சாரியார். சேலம் மதுவிலக்கால் 13 லக்ஷம் நஷ்டமேற்பட்டதென்றாலும் மொத்த கலால் வருமானத்தில் 15½ லக்ஷம் இலாபமே வந்திருக்கிறது. மதுவிலக்கு நஷ்டம் உண்மையில் இந்த ஆண்டு முதல் தான் தொல்லைதரும். இதைத் தீர்க்கும் வழி யாதெனக்கூறப் படவில்லை. இத்தற்கான என்னென்ன புது வரிகள் ஏற்படுமோ? யார் யார்தலை மீது கைவைப்பாச்சோ நாமறியோம். ஆனால் அந்த ஆபத்து பொதுமக்கள் தலை மீது விழத்தயாராகவே இருக்கிறது.

இந்த மாகாண மிவச்சுக் கடன் சுமை 20ஐ சேரூரூபாய். இதன் நிவாரணத்திற்காக ஆச்சாரியார் தமது 'அற்புதமான' பட்ஜட்டில் ஒதுக்கி வைத்திருக்கும் தொகை 50 இலக்ஷம்! கடலில் பெருங்காயத்தைக் கரைக்கும் வீண் வித்தையல்லவா இது? எனக் கேட்கோம். 'மகாநிபுணரென விளம்பரப்படுத்தப்படும் ஆச்சாரியார், 'பாது ஜன பஹார விஷயமாகவு தமது பட்ஜட்டில் ஒதுக்கி வைத்துள்ள தொகை 17, 18 இலக்ஷத்திற்கு மேலில்லை. நிதிதான் பட்ஜட்டின் லட்சண! புது தொழிலுக்கு மான்'புடைதில்லை. கல்வித் திட்டத்திற்கான ஏழரு கும் மரியம் அதிகமாகப் பட்டதா? இல்லை ஆரம்பவர்த்தென்பதைக் கூற வீரும்புகிறோம் மற்றவர்களைக் குறை கூறிவந்த ஆச்சாரியார் தமது பட்ஜட்டிலே, மற்றவர்கள் வாங்க அஞ்சிய அளவு கடன் வாங்குவதிலே கை தேர்ந்தவர் என்பதைக் காட்டினாரே தவிர வேறு எந்த வகையிலும், அவருடைய நிறமை பொன்றும் அங்கு இல்லை என்பதையும், இந்த 'பட்ஜட்' பொது ஜனத்திற்குப் பெரியதொரு ரன்மை எதுவும் செய்யக் கூடியதில்லை வென்பதையும் முந்திய பட்ஜட்டுகளைவிட இது மிக மோசமான பட்ஜட் என்பதையும், பொதுமக்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பு கிறோம்.

சர்க்கார் டிவிடர் நியமனம்.

அய்யங்காருக்குப்பிரஸ்.

சென்னை, மார்ச், 7.

சேரமர் டிவிஸியர சபய்ய கார் திருக்கு தஞ்சாவை நில்லை வுக்கு சர்க்கார் பிளீடராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

"போலீஸ் செத்தா போய் விட்டது"

காங்கரஸ் கூட்டத்தில் மண்மாரி.

டாக்டர் சுப்பராயன் ஒட்டம்.

கும்பகோணம், மார்ச். 6.

இன்று மாலை 6 மணிக்கு காங்கி பார்க்கில் கூடிய ஒரு காங்கரஸ் பொதுக் கூட்டத்தில் கனம் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் பேசுகையில், கூட்டத்தில் பெரிய அமளி ஏற்பட்டது.

ஹரிபுரா காங்கரஸ் தீர்மானங்களைக் குறித்து கனம் டாக்டர் சுப்பராயன பேசுகையில் சில கேள்விகள் கடங்கிய ஓர் சிட்டு அவரிடம்கொடுக்கப்பட்டது.

ஏன் காங்கரஸை விட்டு விலகி சமபரிபாலக சட்டசபையில் நீங்கள் போய் சேர்ந்தீர்கள் என்று கூட்டத்திலிருந்த அவர் கேட்டார்கள்.

அமளி

காங்கியின் கொள்கைகளை ஒப்புக் கொண்டு விட்டதால் சுயமரியாதை இயக்கத்தில் தம்மால் சேர முடியாதென்று பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் கூட்டத்தில் அமளி ஏற்பட்டது. கலவரம் அங்கிங்கே கலவரத்தை அடக்க நிறைதம் மூலமாய் கனம் மந்திரியார்கள் கூட்டத்தைவிட்டுபோய்விட்டார்.

இவர் இவ்வாறு ஒட்டமெடுத்த நிமிஷமேலே மேலாக கூட்டத்தில் அதிக கலவரமும் அமைதியின்மையும் ஏற்படலாயின.

கனம் மந்திரியிட்டுச் சென்ற பேச்சைத் தொடர்ந்து பேசதேழர் கணபதி முயன்றார். ஆனால் அதற்கு கூட்டமிடம் கொடுக்க வில்லை.

மண்மாரி.

கூட்டத்தில் மண்மாரியும் கல் மாரியும் பொழிலாயிற்று.

அடிதடி.

கலவரத்தினால் கடியிருந்த பாமர மக்கள் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள காலாகலமும் ஓடினார்கள். ஓடி நிறவர்களைப் பிடித்து சிலர் மூட்கள் தாக்கினார்கள். இரு கட்சியினர்களும் இக்கலவரத்தில் அடிபட்டனர் என்று சொல்லப்படுகிறது.

கலாட்டா தானாகவே ஏற்படு ஓய்ந்த போலீஸார், சட்டத்திற்கு வெகு தூரவரை காணப்படவேயில்லை. "இக்கூத்தில் போலீஸ் செத்தா போய் விட்டது" என்று மக்களிடக் பரிதாபகரமாகவே முகத்தைக் கொண்டு சென்றார்கள்.

(மெல்)

பெரியம்மாள் மரணம்.

(மதகிநபர் தந்தி)

ஈரோடு, மார்ச். 8

நேரை, ஈரோடுகர் முதலிய இடங்களின் பிரபல வெல்கப் பத்திரை வியாபரியும், மாகான காடார் மாஜான சங்கத்தின் காரியதரிசியும், டோர்பஸ்வியின் டைக்டருமு, ஈரோ சபைக் கென்னெடும், காடார் டவுன் ஹைஸ்கூலின் காரியதரியும், கன்பாடனுடனோன தேழர் பி. ஸி. நெம்பரசாடரின் தாயர் தமது 85வயதில் இன்றகாலை காமனார்.

யாதொரு சடங்குகளுமில்லாமல் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. ஏராளமான பிரமுகர்கள் கியமம் செயிருந்தனர். அன்னாரின் மாணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக காடார்டவுன் ஹைஸ்கூல்இன்று மூடப்பட்டது.

காலஞ்சென்ற அம்மையார் உயர் குடும்பத்தில் சேர்ந்த வார பிருந்தும், தமது ஆயுள்காலத்தில் ழைஎளிய பெண்களின் னமைக்காகவே பாடுபட்டு வந்தார்.